[2017 மார்ச் 20

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 44, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.எ. ஏழுமலை, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

44—

ஊராட்சியைத் தரம் உயர்த்துதல்

***7004—திரு. டி.எ. ஏழுமலை:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூந்தமல்லி தொகுதி, திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம், காக்களூர் ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பூந்தமல்லி தொகுதி, திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம், காக்களூர் ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்துவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.எ. ஏழுமலை அவர்கள்.*

திரு. டி.எ. ஏழுமலை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு மக்களுக்காக தன்னையே அர்ப்பணித்து வாழ்ந்து மறைந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, நல்வழி காட்டி நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

2017 மார்ச் 20]

பூந்தமல்லி தொகுதியில் காக்களூர் கிராமத்தில் கிட்டத்தட்ட 18,000 வாக்காளர்கள் இருக்கின்றனர். எனவே, அப்பகுதி மக்களுடைய கோரிக்கைகள் அதிகமாக இருக்கின்றன. பொதுவாக, மூன்றாயிரம், நான்காயிரம் வாக்காளர்கள் இருக்கிற கிராமங்களில், மக்களுடைய கோரிக்கைகளைச் சரிசெய்ய முடிகிறது. ஆனால், காக்களூரில் 18,000 வாக்குகள் இருப்பதால், மக்களுடைய கோரிக்கைகளும் அதிகமாக இருக்கின்றன. எனவே, காக்களூர் ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்த இந்த அரசு முன்வருமா என்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணை எண் 131, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 16–3–2007–ல் ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்துவது குறித்து நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அந்த நெறிமுறைகளின்படி, திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள காக்களூர் ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்துவது குறித்து திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால், ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு கருத்துரு அனுப்பப்பட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அங்குள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள். மக்கள் தொகை குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது உண்மைதான். காக்களூர் ஊராட்சியின் மக்கள் தொகை 28,428 ஆக இருக்கிறது. அந்த ஊராட்சியின் ஆண்டு வருமானம் ரூ.83.40 இலட்சமாக இருக்கிறது. இரண்டாம் நிலை பேரூராட்சியாகத் தரம் உயர்த்துவதற்கு ஆண்டு வருமானம் ரூ.50 இலட்சம் போதுமானது. எனவே, ஊரக வளர்ச்சி இயக்குநரால், அதற்கான கருத்துரு அரசுக்குப் பரிந்துரையோடு அனுப்பப்பட்டால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, அதனைக் கனிவுடன் பரிசீலனை செய்து, தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.எ. ஏழுமலை அவர்கள்.*

[2017 மார்ச் 20

திரு. டி.எ. ஏழுமலை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி கூறி அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 385 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும், சுமார் 50 முதல் 60 ஊராட்சிகள் இருக்கின்றன. இங்குள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அது தெரியும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தமிழகத்திலே எந்தெந்த ஊராட்சி ஒன்றியங்கள் பெரிதாக இருக்கின்றன என்பதை ஆராய்ந்து, அதிலே சிறப்புக் கவனம் செலுத்தி, அந்த ஊராட்சி ஒன்றியங்களையெல்லாம் பொது மக்கள் நலன் கருதி இரண்டாகப் பிரித்தால், மத்திய அரசாங்கத்தின் மூலமாக ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திற்கும் கூடுதலாக நிதி கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. எனவே, தமிழகத்தில் அவ்வாறு எந்தெந்த ஊராட்சி ஒன்றியங்கள் பெரியதாக உள்ளன என்பதை ஆராய்ந்து, அந்த ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதேனும் சிறப்புத் திட்டம் வைத்திருக்கிறார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணை எண் 131, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 16–3–2007–ல் ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்துவது குறித்த நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன என்பதை முன்னரே கூறியிருக்கிறேன். இருந்தாலும்கூட, 1986–க்குப்பின் ஊராட்சி ஒன்றியங்கள் எதுவும் பிரிக்கப்படவில்லை. 2007–ல் தி.மு.க. ஆட்சியில் நெறிமுறைகள் வகுக்கப்பட்டன. ஆனால், 1986–க்குப் பிறகு, 2012–ல் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் 3 ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தார்கள். ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்தும்போது அல்லது பிரிக்கும்போது, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர், சட்டமன்ற உறுப்பினர்கள்,*

பாராளுமன்ற உறுப்பினர்கள், ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் மாவட்டச் செயலாளர்கள், பெயர்பெற்ற தன்னார்வத் தொண்டு அமைப்புகள், குடியிருப்போர் சங்கங்கள் ஆகியவற்றுடன் முதல் கூட்டம் நடத்தப்பட வேண்டும் என்பது மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அக்கூட்டத்தில் பெறப்படும் கருத்துகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், இரண்டாவது கூட்டத்தில், பரிசீலனை செய்ய வேண்டும். தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளின் கருத்துகள் தனித்தனியாகக் கேட்கப்படும். மேலும், அரசியல் கட்சிகள் மற்றும் கோரிக்கைகள் அளித்துள்ளவர்களின் கருத்துகளும் கேட்கப்படும்.

முற்பகல் 10—30

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையிலான குழுவிடம் தெரிவிக்கப்படும் கருத்துகளின் அடிப்படையில், பரிந்துரைகளோடு கருத்துரு தயாரிக்கப்பட்டு, ஊரக வளர்ச்சித் துறை இயக்குநருக்கு அனுப்பப்பட வேண்டும். தேவைப்பட்டால் ஊரக வளர்ச்சி இயக்குநர் அவர்கள், மாவட்ட அளவிலான ஊரக வளர்ச்சி அல்லது நகராட்சி நிருவாகத் துறைக்கு அந்தக் கருத்துருவை அனுப்பிட வேண்டும். மூன்றாவது கூட்டத்தையும்கூட நமது செயலாளர் அவர்கள் போய்க் கூட்டலாம். அப்படிச் செய்கின்றபோது, விதிமுறைகளுக்குட்பட்டு வருமானால், அதாவது மக்கள்தொகை அனைத்துமே சரியாக இருக்குமானால், அதனடிப்படையில் அரசுக்குக் கருத்துரு அனுப்பப்பட்டால் கண்டிப்பாகப் பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பழனியப்பன் அவர்கள்.

திரு. பெ. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 12,524 ஊராட்சிகள் இருக்கின்றன. சென்னையைத் தவிர பிற மாவட்டங்கள் அனைத்திலும் பெரிய பெரிய ஊராட்சிகள் இருக்கின்றன. பொதுவாக, பரப்பளவிலும், அதேவேளையில், மக்கள்தொகை அடிப்படையிலும் பெரிய ஊராட்சிகளாக அவை இருக்கின்றன. பொதுவாக,

[2017 மார்ச் 20

ஊராட்சிகள்தான் அங்கு இருக்கக்கூடிய மக்களுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற ஒரு நல்ல ஆட்சி நிருவாகமாக இருக்கின்றன. அந்தவகையிலே தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய பெரிய ஊராட்சிகளை அடையாளம் கண்டு, அதைப் பிரிப்பதற்குண்டான வாய்ப்பை நாம் ஏற்படுத்த வேண்டும். ஒருவேளை மாநகராட்சிப் பகுதியின் பக்கத்திலே பெரிய ஊராட்சிகள் இருந்தால், அவற்றையும் மாநகராட்சிப் பகுதியோடு இணைப்பதற்குரிய வாய்ப்பு இருக்கிறது. அதேபோன்று, நகராட்சிக்குப் பக்கத்திலே பெரிய ஊராட்சிகள் இருந்தால், அவற்றை நகராட்சியோடு இணைப்பதற்கான வாய்ப்பும் இருக்கிறது. பேரூராட்சிக்குப் பக்கத்திலே இருந்தால்கூட, அந்த ஊராட்சிகளைப் பேரூராட்சியைப் புதிதாக விரிவுபடுத்துகிற போது, அதனோடு இணைப்பதற்கான வாய்ப்பும் இருக்கிறது. ஆனால், பல மாவட்டங்களில் மலைப் பகுதியில் பெரிய ஊராட்சிகள் இருக்கின்றன. அவை மாநகராட்சிக்கும், நகராட்சிக்கும் தொலைதூரத்தில் இருக்கின்றன. ஆகவே, இப்படிப்பட்ட பெரிய ஊராட்சிகளைப் பிரிப்பது என்பது நீண்ட காலமாக நிலுவையில் இருக்கிறது. ஆகவே, இதுபோன்று அதிக அளவு பரப்பளவு கொண்ட பெரிய ஊராட்சிகளை, மக்கள்தொகை அதிகமாக உள்ள ஊராட்சிகளைக் கண்டறிந்து, அந்த ஊராட்சிகளின் நலன் கருதி, போக்குவரத்துச் சிரமங்களை அறிந்து, அவற்றைப் பிரித்துக் கொடுத்து, அங்குள்ள மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குரிய செயற்குறிப்பு அரசினுடைய பரிசீலனையில் உள்ளதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஊராட்சிகளைப் பிரிப்பது பற்றிப் பேசினார்கள். அதேபோல, பேரூராட்சிகள், உள்ளாட்சி அமைப்புகளை, மாநகராட்சிகளாக, நகராட்சிகளாகத் தரம் உயர்த்துவது பற்றியும், சேர்ப்பது பற்றியும் பேசினார்கள். திண்டுக்கல், தஞ்சாவூர் போன்ற நகராட்சிகள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் இன்றைக்கு மாநகராட்சிகளாகத் தரம் உயர்த்தப்பட்டு, பக்கத்தில் இருக்கக்கூடிய

ஊராட்சிகள், பேரூராட்சிகள் எல்லாம் சேர்க்கப்பட வேண்டும் என்று அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது. தமிழகத்திலே 12,524 ஊராட்சிகள் இருக்கின்றன. ஏற்கெனவே விதிமுறை வகுக்கப்பட்டிருக்கின்றன. அதைத்தான் சொன்னேன். அதிலும்கூட சில விதிமுறைகள் மாற்றியமைக்கப்பட்டு, கடைசியாக 2007–லே நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அங்கே இருக்கக்கூடிய மக்கள் தொகை, வருமானம், அதேபோல வசதிகள் அனைத்தும் விதிமுறைகளுக்குட்பட்டு இருக்க வேண்டும். அதேபோல, அங்கே இருக்கக்கூடிய மக்கள் சுலபமாகச் செல்லக்கூடிய வகையில், போக்குவரத்துக்கு ஏற்ப ஊராட்சிகள், பேரூராட்சிகள் அல்லது நகராட்சிகள் அமைக்கப்பட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்று, தமிழகத்தில் ஊராட்சிகள் ஏதேனும் அதுபோன்று இருந்தால், மாண்புமிகு உறுப்பினர்கள் அதுகுறித்துச் சொன்னால், கண்டிப்பாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கனிவுடன் பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது ஜனத்தொகை அதிகமாகிக் கொண்டே வருவதால், உள்ளாட்சி அமைப்புகளைப் பிரிக்க வேண்டிய, விரிவுபடுத்த வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. அதனடிப்படையில் இப்பொழுது ஊராட்சிகளைப் பிரித்து, ஊராட்சி ஒன்றியங்களை விரிவுபடுத்தக்கூடிய அளவிற்குத் திட்டங்களை வகுக்க வேண்டும். அதேபோன்று, பெரிய நகராட்சிகளும் இருக்கின்றன. பெரிய நகராட்சிகளில் மக்கள் தொகை அதிகமாக இருந்தால், அந்த நகராட்சிகளையும் பிரிக்க வேண்டும்; இல்லையென்றால் மாநகராட்சிகளாக மாற்ற வேண்டும். குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால், காரைக்குடியிலே ஜனத்தொகை அதிகமாக இருக்கிறது. அங்கே அனைத்து வகையான வசதிகளும் இருக்கின்றன. அதை மாநகராட்சியாக மாற்றுவதற்கு விதிமுறைகள் எல்லாம் பொருந்தி இருக்கின்றன. எனவே, காரைக்குடி நகராட்சியை மாநகராட்சியாகத் தரம் உயர்த்திட அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—35

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் சட்டமன்றக் கட்சித் தலைவர் அவர்கள் காரைக்குடி நகராட்சியை மாநகராட்சியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஆவடி, ஓசூர், கரூர் போன்ற பல நகராட்சிகள் மக்கள்தொகை அதிகம் இருக்கக்கூடிய பகுதிகளாக இருப்பதால், இதற்கு முன்னரே அவை மாநகராட்சிகளாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில் காங்கிரஸ் சட்டமன்றக் கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன கோரிக்கை விதிமுறைகளுக்குட்பட்டிருப்பின், மக்கள்தொகை, வருவாய் போன்றவற்றைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால், பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 45, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

45—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***8765—திரு. இரா. குமரகுரு:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, உளுந்தூர்பேட்டையில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதி, உளுந்தூர்பேட்டையில் அரசு பலவகை தொழில்நுட்பக்